# சமூக சேவை முன்னோடி கே.வி.வேலு பெயரில் பல்கலைக்கு $50,000 கொடை

இர்ஷாத் முஹம்மது




திருவாட்டி ராணி வேலுவுக்கு நன்றி கூறும் வகையில் சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக் கழகத்தின் மூத்த கல்வியியல் நிர்வாகி பேராசிரியர் சுய் காய் சோங் நினைவுப்பரிசு வழங்குகிறார். **படம்: சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்**



சிங்கப்பூரின் சமூக சேவை முன்னோடியாகப் போற்றப்படும் கே.வி. வேலு, தமது 84வது வயதில் கடந்த ஜூன் மாதம் காலமானார்.

சிங்கப்பூரின் சமூக சேவை முன்னோடியாகப் போற்றப்படும் மறைந்த கே.வி. வேலுவின் நினைவாக அவரது குடும்பத்தாரும் நண்பர்களும் முன்னாள் சக ஊழியர்களும் இணைந்து சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு $50,000 நன்கொடை வழங்கியுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் எஸ்.ஆர். நாதன் மனிதவள மேம்பாட்டுப் பள்ளியின் சமூக சேவை இளங்கலைப் பட்டப்படிப்பில் சிறப்பு விருதுகளுக்கு அந்த நன்கொடை நிதி பயன்படுத்தப்படும்.

ஒவ்வோர் ஆண்டின் தலைசிறந்த இரு மாணவர்களுக்கு 2020ஆம் ஆண்டு முதல் புத்தகப் பரிசாக வழங்கப்படும். மறுவாழ்வு, குற்றவியல் நீதிமுறைகளுக்கான கே.வி.வேலு புத்தகப் பரிசு, சமூகக் கொள்கை, திட்டமிடலுக்கான கே.வி. வேலு புத்தகப் பரிசு என இரு புத்தகப் பரிசுகளுக்கும் தலா $1,000 ஆண்டுதோறும் நடைபெறும் பட்டமளிப்பு விழாவின்போது வழங்கப்படும்.

போதைப்பொருள் புழங்கிகளுக்கும் சிறைக் கைதிகளுக்கும் மறுவாழ்வுக்கான வாய்ப்பை வழங்க பெரும் பங்காற்றியுள்ள திரு கே.வி. வேலு தமது 84வது வயதில் கடந்த ஜூன் மாதம் காலமானார்.

சிங்கப்பூரின் தொடக்க கால சமூக சேவைத் துறையின் வளர்ச்சிக்குச் சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்தியவர் திரு வேலு.

சிங்கப்பூரின் சமூக நன்னடத்தைச் சேவையை 1971ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது திரு வேலுவின் முக்கிய பங்களிப்புகளில் ஒன்று என்று சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சர் திரு டெஸ்மண்ட் லீ தமது அஞ்சலியில் அப்போது தெரிவித்திருந்தார்.

திரு வேலுவின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள புத்தகப் பரிசு நன்கொடைக்கான ஒப்பந்தம் நேற்று ஸ்ரீ நாராயண மிஷன் முதுமை தாதிமை இல்லத்தில் கையெழுத்தானது. மறைந்த திரு வேலுவின் மனைவி திருவாட்டி ராணி வேலுவும் சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூத்த கல்வியியல் நிர்வாகி பேராசிரியர் சுய் காய் சோங்கும் உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

திரு வேலுவின் சகோதரியின் பேரனும் ஸ்ரீ நாராயண மிஷனின் தலைமை நிர்வாக அதிகாரியுமான திரு எஸ் தேவேந்திரன் வரவேற்பு உரை ஆற்றினார்.

"இன்று சமூக சேவைத் துறையில் பணியாற்றும் நான் என் பாட்டியின் சகோதரரான திரு வேலுவிடம் கற்ற பாடங்கள் எண்ணிலடங்கா.

சுதந்திர சிங்கப்பூரின் தொடக்க காலங்களிலிருந்து வகுக்கப்பட்ட சமூகக் கொள்கைகளுக்குப் பின்னால் இருந்த வரலாற்று மேம்பாடுகளை அறிந்த எனக்கு அந்தத் துறையை மேலும் நேசிக்க நாட்டம் ஏற்பட்டது," என்றார் திரு தேவேந்திரன்.

இன ரீதியான சுய உதவிக் குழுக்கள் சிங்கப்பூரில் அறிமுகம் கண்டதைப் பற்றியும் தம்மிடம் பகிர்ந்துகொண்டதாகக் கூறிய அவர், 2009ஆம் ஆண்டு சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தில் பணியில் சேர்ந்தபோது திரு வேலுவின் அறிவுரைகளைக் கேட்டறிந்ததாகப் பெருமையுடன் கூறினார்.

2016ஆம் ஆண்டு ஸ்ரீ நாராயண மிஷனில் பணியில் சேர்ந்தபோதும் சமூகத்தின் வேறொரு சேவைத் துறைக்கும் திரு வேலுவின் அறிவுரைகள் உதவியதாக திரு தேவேந்திரன் தெரிவித்தார்.

"அவர் செய்த நல்ல பணிகள் சமூக சேவைத் துறையில் சேரும் அடுத்த தலைமுறையினருக்கு நல்லதொரு பாடமாக அமையும். அது மூலம் அவர்கள் உத்வேகம் அடைவார்கள் என்று நம்புகிறேன்," என்றார் அவர்.

"தமது வாழ்வில் சுமார் அரை நூற்றாண்டு காலத்தைச் சமூக சேவைக்காக அர்ப்பணித்த முன்னோடிக்கு இந்தப் புத்தகப் பரிசு தகுந்த அஞ்சலி," என்றும் திரு தேவேந்திரன் கூறினார்.

"அன்றைய தேவைக்கான சமூகக் கொள்கைகளை வகுத்தவர்களில் வேலு ஒருவர். இனி நாம் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கு அடுத்த தலைமுறையினர் கொள்கைகள் வகுக்க வேண்டும். அதற்கு இப்புத்தகப் பரிசும் அதற்கு சூட்டப்பட்டுள்ள அவரது பெயரும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும்," என்றாரவர்.

திரு வேலுவின் பெயரில் அமைக்கப்படும் புத்தகப் பரிசுக்கு நன்றி தெரிவித்தார் பல்கலைக் கழகத்தின் மூத்த கல்வியியல் நிர்வாகி பேராசிரியர் சுய் காய் சோங். அவரது பெயரைச் சூட்ட ஒப்புதல் அளித்த திருவாட்டி ராணி வேலுவிற்கு நன்றி கூறிய அவர், நண்பரின் நினைவாக இந்த நன்கொடை வழங்கிய பங்களிப்பாளர்களுக்கும் நன்றி நல்கினார்.

"இந்த நன்கொடையால் பலனடையவிருக்கும் சமூக சேவைத் துறை மாணவர்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்," என்றார் அவர்.